பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை:திருமதி.ப.ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப.,

ந.க.அ3/11717/2018 நாள்: 25.02.2022

பொருள்: பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலகு - (லேட்) கோ.கோவிந்தராஜ், உதவி ஆய்வாளர் மகன் கோபிநாத் (திரு) கோ. - கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணி நியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணையிடப்படுகிறது.

பார்வை:

1. அரசாணை நிலை எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள்: 02.03.2016.
2. அரசாணை நிலை எண்: 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்: 26.02.2021
3. கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையரின் கடித எண். ஆகு.2/24163/2020 நாள்: 28.10.2021.
4. கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையரின் கடித எண். ஆகு.3/18395/2020 நாள்: 28.10.2021.
5. சென்னை கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண்: ஆகு3/ 18395/2020 நாள்: 01.11.2021.
6. சென்னை கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையரின் கடிதம் ஆகு3/18395/2020 நாள்: 22.11.2021.

*****

ஆணை:

பெரம்பலூர் மாவட்டம், பாடலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணியிடையே 20.09.2011 அன்று காலமான திரு.கோவிந்தராஜ் என்பவரின் மகன் திரு.கோ.கோபிநாத் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி அவரது தாயார் திருமதி.G.நீலாவதி என்பவர் குறிப்பிட்ட காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருந்ததால் பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/11717/2018 நாள்: 12.11.2018 இன் படி பணி நியமனம் செய்யப்பட்டு, தனியர் 20.11.2018 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

Scanned with CamScanner

2) தனியரின் பணியினை வரன்முறை செய்ய முன்மொழிவுகள் சென்னை கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. பார்வை 6-இல் காணும் கடிதத்தில் பத்தி 4-இல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களது பணியினை வரன்முறை செய்ய பார்வை 1-இல் காணும் அரசாணையின் படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) எனவே, பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளராக கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.கோ.கோபிநாத் என்பவரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 20.11.2018 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

4) இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதியம் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ஒம்/-பழூரீ வெங்கட பிரியா,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
பெரம்பலூர்.

பெறுநர்:

திரு.கோ.கோபிநாத்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்,
ஆலத்தூர்.

நகல்:
வருவாய் வட்டாட்சியர்,
ஆலத்தூர்.

/உத்திரவுப்படி/

25/12/2022
மாவட்ட ஆட்சியருக்காக,
பெரம்பலூர்.